| வினாத்தாளின் வகை |
|---|
| A |

| பதிவு எண் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

## இரண்டாம் நிலை ஆண் / பெண் காவலர்கள் தேர்வு-2008

நாள்: 03-08-2008 நேரம்: காலை 1000 மணி

நேரம் : 80 நிமிடங்கள் மொத்த மதிப்பெண் : 80

### அறிவுரைகள்

1. இவ்வினாத்தாளில் பகுதி 'அ' பொது அறிவு சம்பந்தப்பட்டது. அதில் 50 வினாக்கள் உள்ளன. பகுதி 'ஆ' உளவியல் சம்பந்தப்பட்டது. அதில் 30 வினாக்கள் உள்ளன.
2. வரிசை எண் 1 முதல் 50 வரை பகுதி–அ வில் உள்ள பொது அறிவு வினாக்களையும் வரிசை எண் 51 முதல் 80 வரை பகுதி–ஆ வில் உள்ள உளவியல் வினாக்களையும் குறிக்கும்.
3. மேலே குறிப்பிட்டுள்ள இந்த வினாத்தாளின் வகையை, விடைத்தாளில் அதற்குண்டான இடத்தில் பட்டை தீட்டவும். வினாத்தாளின் வகையை பட்டைத் தீட்டாவிட்டால், அந்த விடைத்தாள் மதிப்பிடப்பட மாட்டாது.
4. 80 கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.
5. ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு மதிப்பெண்.
6. நீலம் (அ) கருப்பு நிற பால் பாயின்ட் பேனாவை கொண்டு பதிவு எண்ணை அதற்குரிய கட்டத்தில் நிரப்பவும்.
7. பதிவு எண் மற்றும் விடைகளை நீலம் (அ) கருப்பு நிற பால் பாயின்ட் பேனாவை கொண்டு அந்தந்த வட்டங்களில் பட்டை தீட்டவும்.
8. ஒரு வினாவிற்கு ஒரு விடையை மட்டுமே தேர்ந்தெடுத்து பட்டை தீட்டவும்.
9. தவறாக பட்டை தீட்டுவதையும் அடித்தல் திருத்தங்கள் செய்வதையும் தவிர்க்கவும்.. பதிவு எண்ணையும், விடைகளையும் கவனமாக பட்டை தீட்டவும். பதிவு எண்ணையும், விடைகளையும் சரியாக பட்டைத் தீட்டப்படாத விடைத்தாள் மதிப்பிடப்படமாட்டாது.
10. பதிவு எண்ணை, **கேள்வித்தாளில்** அதற்கென குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் எழுதவும்.

## பகுதி 'அ' பொது அறிவு

1. வானவில்லில் உள்ள 7 வண்ணங்களில் நடுவில் உள்ள வண்ணம்
   (B) பச்சை

2. பெர்னௌலி தத்துவத்தில் இயங்குவது:
   (D) எண்ணெய் தூவி

3. மழைத்துழிகள் கோள வடிவத்தை பெறக்காரணம்:
   (C) பரப்பு இழுவிசை

4. 10 மீட்டரிலிருந்து விழும் 2 கி.கிராம் நிறைகொண்ட பொருளில் உருவாகும் வெப்ப ஆற்றல்:
   (A) 196 ஜூல்

5. மனிதனின் இயல்பு வெப்பநிலை:
   (B) 36.9 C

6. நீரில் பிராணவாயு (ஆக்ஸிஜன்), மற்றும் நீரகவாயு(ஹைற்றஜன்), சேர்ந்துள்ள எடை விகிதம்:
   (A) 8:1

7. காற்று :
   (B) ஒருபடித்தான கலவை

8. அணுக்கரு உலையில் கிராபைட்,பெரிலியம்,கனநீர் ஆகியவை எதுவாக பயன்படுகிறது:
   (A) தணிப்பான்

9. ஃபிராஷ்முறை மூலம் சேகரிக்கப்படும் தனிமம்:
   D) கந்தகம் (சல்ஃபர்)

10. தேனிரும்பில் கார்பனின் சதவீதம்:
    (B) 0.1 - 0.2%

11. கால்நடைகளில், ஆடுகளில் உண்டாகும் நோய்:
    (C) ஆந்திராக்ஸ்

12. தாவர செல்களில் காணப்படாத செல்நுண் உறுப்பு:
    (C) சென்டிரோசோம்

13. புற்றுநோய் பற்றி அறியும் பிரிவின் பெயர்:
    (A) ஆங்காலஜி

14. எலிசா சோதனை இந்த நோயை கண்டறிய உதவும்:
    (A) எயிட்ஸ்

15. இவற்றுள் மிக அதிக நீர்தேவை உடைய பயிர்:
    (A) நெல்

16. "டிஸ்கவரி ஆஃப் இந்தியா" என்ற நூலின் ஆசிரியர்:
    (B) ஜவஹர்லால் நேரு

17. அலிகார் இயக்கத்தைத் தொடங்கியவர்:
B) சையது அகமது கான்

18. பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர்:
(B) ஆசார்ய வினோபாபாவே

19.இந்தியா சுதந்திரம் பெரும்போது இங்கிலாந்து பிரதமராக இருந்தவர்:
(A) அட்லி

20. 1947ல் காஷ்மீர் அரசராக இருந்தவர்:
(D) ஹரி சிங்

21. அந்தமான் தீவுகள் சுமார் எத்தனை தீவுகளை கொண்டது:
(C) 300

22.இந்தியாவில் மிக அதிக உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்து நடைபெரும் நதி:
(B) ஹூக்ளி

23. நம்நாட்டில் முதன்முதலாக இரும்பு-எஃகு தொழிலகம் நிறுவப்பட்ட இடம்:
(B) ஜாம்ஷெட்பூர்

24. சர்க்கரை உற்பத்தியில் முதலாவதாக உள்ள மாநிலம்:
(A) உத்திரப்பிரதேசம்

25.1000 ஆண்களுக்கு, ஆயிரத்திற்கு அதிகமாக பெண்கள் இருக்கும் மாநிலம்:
(D) கேரளா

26. 3, 12, 48, . . . என்ற பெருக்குத் தொடரில் முதல் 6 உறுப்புகளின் கூடுதல்:
(A) 4095

27. ஒரு உருளையின் உயரம் 15 செ.மீ மற்றும் அதன் ஆரம் 7 செ.மீ எனில் அதன் வளைபரப்பு:
(A) 660 செ.மீ $^{2}$

28. அரைவட்டத்தில் அமையும் கோணம்:
(A) செங்கோணம்

29. 30 மீ உயரமுள்ள கோபுரத்தின் உச்சியிலிருந்து ஒருவன் ஒரு மரத்தின் அடியை 45 டிகிரி இறக்கக் கோணத்தில் காண்கிறான் எனில் மரத்திற்கும்,கோபுரத்திற்கும் இடையேயுள்ள தூரம்:
(D) 30 மீ

30. 3x + 2y =5 என்ற கோட்டின் சாய்வு
(B) -3/2

31. உள்ளாட்ச்சி அமைப்புகளின் பதவிக்காலம்:
(D) ஐந்து ஆண்டுகள்

32.நாடாளுமன்ற மக்கள் சபையில் அதிகப்படியாக எவ்வளவு உறுப்பினர்கள் இருக்கலாம்?
(D) 552

33. மாநில அரசுகளின் ஆட்சியை கலைக்கும் அதிகாரம் யாரிடம் உள்ளது:
(D) ஜனாதிபதி

34. இராணுவ ஆட்சி நடைபெரும் நாடு:
(C) மியான்மர்

35. நாடாளுமன்ற மக்கள் சபை உறுப்பினராக குறைந்தபட்ச வயது:
(C) 25

36. க்ளியோபாடிரா (CLEOPATRA) என்ற இராணி ஆண்டு வந்த நாடு?
(B) எகிப்து

37. ஜே.சி. போஸ் (1858--1937) என்பவர் ஒரு
(C) விஞ்ஞானி

38. "த ஹிந்து" (THE HINDU) என்ற தினசரி செய்தித்தாளை தோற்றுவித்தவர்?
All Correct

39. கீழ்கண்டவர்களில் இந்திய பிரதமராக பணியாற்றாதவர் யார்?
( (B) மோகன் தாஸ் கரம்சந்து காந்தி

40. 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பு படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை சுமார்:
(A) 6.2 கோடி

41. மேடம் மேரி க்யூரி என்ற புகழ்பெற்ற விஞ்ஞானி எந்த நாட்டை சேர்ந்தவர்?
(D) போலந்து

42. வியன்னா என்ற நகரம் எந்த நாட்டின் தலைநகரம்?
(A) ஆஸ்டிரியா

43. ஈராக் நாட்டின் தலைநகரம்?
(A) பாக்தாத்

44. ஒளி ஆண்டு என்பது எதன் அளவு?
(B) தூரம்

45. வரண்ட காற்றில் ஒலியின் வேகம், ஒரு மணித்துளிக்கு சுமார்
(A) 350 மீ

46. ஐரோப்பிய கால்பந்து (ஈரோ 2008) போட்டிகளில் சேம்பியன் பட்டத்தை வென்ற நாடு?
(B) ஸ்பெயின்

47. ஆண்கள் 100 மீட்டர் ஓட்டபந்தயத்தில் தற்போதைய உலகசாதனை:( செ = மணித்துளிகள்)
(C) 9.72 செ

48. காரியல் (GHARIAL) என்பது ஒரு வகை
(D) முதலை

49. இந்தியாவின் குறுக்காக ஓடும் சிறப்பு அட்சம்.
(B) கடகரேகை

50. இந்தியாவில் கூட்டுறவுச் சங்கங்களை அறிமுகப்படுத்தியவர்
(B) கர்சன் பிரபு

## பகுதி " ஆ" உளவியல்

**அடுத்து வரும் ஐந்து வினாக்களில் தனித்து நிற்பது எது என்பதை காணவும்.**

51.) 3, 5, 9, 11, 14, 17, 21
(C) 14

52.) 41, 43, 47, 53, 61, 71, 73, 81
(D) 81

53.) 1, 4, 9, 16, 23, 25, 36
(B) 23

54.) 8, 27, 64, 100, 125, 216, 343
(B) 100

55.) 3, 7, 15, 27, 63, 127, 255
(C) 27

**ஒரு சங்கேத மொழியில் ஆங்கில எழுத்துகளுக்கு பதிலாக எண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.ஒவ்வொரு ஆங்கில வார்த்தைக்கு கீழே அதனை குறிக்கும் எண்கள் தரப்பட்டுள்ளது, ஆனால் அந்த எண்கள் வரிசையாக இல்லாமல், கலந்துள்ளது. எந்த ஆங்கில எழுத்துக்கு எந்த எண் என்று அறிந்து, அடுத்து வரும் ஐந்து வினாக்களுக்கு பதில் தரவும்.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ABLMS | QRLBA | PTQAB | LRNPQ | ATRNP | MSPTQ | QPNAR | RABLS | TSLBA | PLQST |
| 24538 | 93526 | 52601 | 93716 | 29071 | 84106 | 16729 | 29583 | 80325 | 31860 |

56. "P" ஐ குறிக்கும் எண் எது?
(C) 1

57. "S" ஐ குறிக்கும் எண் எது?
(D) 8

58. "T" ஐ குறிக்கும் எண் எது?
(C) 0

59. 5678 என்ற எண் எதை குறிக்கும்
(C) BQNS

60. "ARM" என்பது எவ்வாறு குறிக்கப்படும்?
(D) 294

**அடுத்து வரும் 5 வினாக்களை கீழ்கண்ட பத்தியை படித்து, அதன் அடிப்படையில் பதில் தரவும்.**

ஒரு பெஞ்சின் மீது ஐந்து நபர்கள் அமர்ந்துள்ளனர்.நடுவில் நீலநிற புடவையில் உள்ளவர் பாபுவின் தாயார். வெள்ளை சட்டை அணிந்து இடது கோடியில் அமர்ந்துள்ளவர் பாபுவின் தாய்வழி மாமா. வலது கோடியில் அமர்ந்துள்ள பெண்மணி பச்சைநிற புடவையில் உள்ளார். இவர் கணவர் நீலநிற புடவையில் உள்ளவருக்கும் வெள்ளை சட்டை அணிந்தவருக்கும் நடுவே அமர்ந்துள்ளார். அவர் சிவப்பு சட்டை அணிந்துள்ளார். அந்த பெஞ்சில் அமர்ந்துள்ள மேலும் ஒரு பெண்மணி மஞ்சள்நிற புடவையில் உள்ளார். இவர் நீலநிற புடவையில் உள்ளவருக்கு தங்கை ஆவார். சிவப்பு சட்டை அணிந்துள்ளவர் நீலநிற புடவையில் உள்ளவருக்கு மகன் ஆவார்.

61. பச்சைநிற புடவையில் உள்ளவர் பாபுக்கு என்ன உறவு?
(D) சகோதரனின் மனைவி

62.மஞ்சள்நிற புடவையில் உள்ளவருக்கு வெள்ளை சட்டை அணிந்து இடது கோடியில் அமர்ந்துள்ளவர் என்ன உறவு?
(C) சகோதரன்

63. பச்சைநிற புடவையில் உள்ளவருக்கு நீலநிற புடவையில் உள்ளவர் என்ன உறவு?
(B) மாமியார்

64. பச்சை நிற துணி அணிந்துள்ளவருக்கு அருகே அமர்ந்துள்ளவர்,அவருக்கு என்ன உறவு?
(C) மாமியாரின் தங்கை

65. சிவப்பு சட்டை அணிந்துள்ளவர் , வெள்ளை சட்டை அணிந்தவருக்கு என்ன உறவு?
(B) தாய்வழி மாமா

66. ஒரு கூட்டத்திற்கு வந்த 10 நபர்கள் ஒருவருடன் ஒருவர் கை குலுக்கி கொண்டால், மொத்தம் எவ்வளவு கை குலுக்குகள் ஏற்படும்?
(B) 45

67.ஒரு வகுப்பில் 18 ஆண்கள் 160 செ.மீ க்கு மேல் உயரமாக உள்ளனர். இவர்கள் மொத்த ஆண்களில் 3/4 பங்கு ஆவார்கள். ஆண்கள் அந்த வகுப்பில் உள்ள மாணவர்களில் 2/3 பங்கு ஆவார்கள்.அந்த வகுப்பில் பெண்கள் எவ்வளவு பேர்?
(B) 12

68. ஒரு மாணவன் போட்ட 48 கணக்குகளில் சரியாக போட்டதை விட இரண்டு மடங்கு தவறாக இருப்பின், சரியாக போட்ட கணக்குகள் எவ்வளவு?
(B) 16

69.இராமு ரூ. 38 க்கு ஆபிள்,மற்றும் ஆரஞ்சு பழங்கள் வாங்கினான். ஆபிள் ஒன்று ரூ.7 க்கும், ஆரஞ்சு ஒன்று ரூ.5 க்கும் வாங்கியிருந்தால், எவ்வளவு ஆபிள் வாங்கினான்?
(C) 4

70. 15 மாணவர்களில் 7 பேருக்கு ஆங்கிலம் தெரியும்; 8 பேருக்கு இந்தி தெரியும்; 3 பேருக்கு இந்தி, ஆங்கிலம் இரண்டும் தெரியாது. இரண்டு மொழிகளும் தெரிந்தவர் எத்தனை பேர்?
(B) 3

**அடுத்து வரும் ஐந்து வினாக்களில் இரண்டு வாக்கியங்கள் I மற்றும் II கொடுக்கப்பட்டுள்ளது. அந்த இரண்டு வாக்கியங்களுக்கும் உள்ள தொடர்பு கீழ்கண்டவற்றுள் எவ்வாறானது என்பதை கூறவேண்டும்.**

(A) I வாக்கியத்தில் உள்ள சம்பவம் II வாக்கியத்தில் உள்ள காரணத்தால் ஏற்பட்டது.
(B) II வாக்கியத்தில் உள்ள சம்பவம் I வாக்கியத்தில் உள்ள காரணத்தால் ஏற்பட்டது.
(C) I,மற்றும் II வாக்கியங்களில் கூறப்பட்ட சம்பவங்களக்கு காரணம் ஒன்றே.
(D) I,மற்றும் II வாக்கியங்களில் கூறப்பட்ட சம்பவங்களக்கு காரணம் வெவ்வேறு.

71. I ----- எரிபொருள்களின் விலை கடந்த வாரத்தில் சிறிதளவு குறைந்தது
II ---- அரசு, எரிபொருள்களின் மீதான விற்ப்பனை வரியை கடந்த வாரம் குறைத்தது.
(A) I வாக்கியத்தில் உள்ள சம்பவம் II வாக்கியத்தில் உள்ள காரணத்தால் ஏற்பட்டது.

72. I---- தற்போது குடிநீர் தேக்கங்களில் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்துள்ளது.
II ----தற்போது தமிழகம் வரும் அநேக இரயில்கள், இரயில் பாதைகளை நீர் சூழ்ந்துள்ளதால் , இரத்து செய்யப்பட்டுள்ளது.
(C) I,மற்றும் II வாக்கியங்களில் கூறப்பட்ட சம்பவங்களக்கு காரணம் ஒன்றே.

73. I ----அந்தப் பகுதியில் உள்ள பள்ளிகள் அனைத்திற்க்கும் கடந்த வாரம் கட்டாய விடுமுறை அளிக்கப்பட்டது.
II ----நிறைய பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அந்தப் பகுதியில் உள்ள பள்ளிகளில் இருந்து எடுத்துவிட்டனர்.
(D) I,மற்றும் II வாக்கியங்களில் கூறப்பட்ட சம்பவங்களக்கு காரணம் வெவ்வேறு.

74. I---- இராஜபுரியில் உள்ள அநேக மக்கள் பெரிய செல்வந்தர்கள்.
II---- இராஜபுரியில் உள்ள பல்பொருள் அங்காடியில் மற்ற அங்காடிகளை விட அதிக விற்பனை ஏற்பட்டது.
(B) II வாக்கியத்தில் உள்ள சம்பவம் I வாக்கியத்தில் உள்ள காரணத்தால் ஏற்பட்டது.

75. I---- காவல்துறையினர் சமீபத்தில் ஒரு திருடர் கூட்டத்தை கைது செய்தனர்.
II---- பொதுமக்கள் இரவு நேரங்களில் தங்கள் பகுதிகளில் ரோந்துப் பணியில் ஈடுபடுகின்றனர்.
(C) I,மற்றும் II வாக்கியங்களில் கூறப்பட்ட சம்பவங்களக்கு காரணம் ஒன்றே.

**அடுத்து வரும் 5 வினாக்களை கீழ்கண்ட பத்தியை படித்து, அதன் அடிப்படையில் பதில் தரவும்.**

பருவ மழை ஒரு வருடம் சரியாக பெய்யவில்லை எனில் அது பல கோடி மக்களை பாதிக்கும் என்பது அனைவரும் தெரிந்ததே. சில மக்களின் வாழ்க்கையை அது நேரடியாக பாதிக்கும்; மற்றும் பலர் மறைமுகமாக பாதிப்பு அடைகின்றனர். அதே போன்று நல்ல பருவமழையினால் மக்கள் மகிழ்வையும், வளத்தையும் பெருகின்றனர்.உதாரணமாக கடந்த சில வருடங்களாக இந்தியா ஒரு சீரான பொருளாதர வளர்ச்சி அடைந்ததோடு மட்டுமில்லாமல், சமீபத்தில் எதிர்பார்ப்புகளைவிட அதிக வளர்ச்சி அடைந்துள்ளது. பருவமழை சீராக வராததால் வரும் பாதிப்பு, வருமையிலிருக்கும் ஏழைகளைத்தான் அதிகம் வாட்டுகிறது. பொருளாதர வல்லுனர்கள் அன்னிய நாடுகளில் உள்ள காப்பீடு கழகங்களில்,பருவமழை சீராக வராததால் வரும் இழப்புகளை காப்பீடு செய்துகொண்டால், இதை சமாளிக்கலாம் என்று கருதுகின்றனர்.

76." வெளிநாடுகளில் உள்ள அநேக மக்களுக்கு இந்தியாவில் பருவமழை பெய்யவில்லை எனில் ,எந்த பாதிப்பும் ஏற்படாது."
(C) இந்த கருத்து அநேகமாக உண்மையாக இருக்கும்.

77. "கடந்த சில வருடங்களாக , இந்தியாவில் பருவமழை ஒரு ஆண்டு சிறப்பாகவும் ,மறு ஆண்டு மோசமாகவும் இருந்துள்ளது."
(B) இந்த கருத்து முற்றிலும் தவறு.

78. "இந்தியாவின் பொருளாதரம், கடந்த சில வருடங்களாக,குறிப்பிடும் படியான முன்னேற்றம் அடைந்துள்ளது."
(A) இந்த கருத்து முற்றிலும் உண்மை.

79. " இந்தியாவின் பருவமழை பற்றாக்குறை, நம் நாட்டில், ஏழைகளை மட்டுமே பாதிக்கிறது."
(B) இந்த கருத்து முற்றிலும் தவறு.

80. " உலகெங்கும் பருவமழை பற்றாக்குறையினால் வரும் இழப்புக்களை, காப்பீட்டு கழகங்கள் ஈடுகட்டுகின்றனர்."
(B) இந்த கருத்து முற்றிலும் தவறு.